[27th January 1970

Municipal Engineers-I Grade.

* 77. *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) the number of Municipal Engineers—I Grade in the Department of Public Health, Engineering and Municipal Works to whom extension of service was given after the retirement age during 1968–69 and on date during 1969–70 ; and

(*b*) if so, the reasons therefor ?

நகராட்சிப் பொறியாளர்கள் (தரம் I).

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுச் சுகாதார பொறியியல் நகராட்சிப் பணிகள் துறையில் 1968–69ஆம் ஆண்டில், 1969–70ஆம் ஆண்டில் நாளது தேதி வரையும் ஓய்வு பெறும் வயதுக்குப் பின்னரும் பணி நீடிப்பு கொடுக்கப்பட்ட நகராட்சி பொறியாளர்கள் (தரம் I) எத்தனை பேர் ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Thiru V. ISVARMURTI : Sir, there is a specific case in Madurai Municipality where Engineer, Grade I has been given extension. Persons with lesser qualifications have been given extensions. Will the Government avoid giving such extensions and thus avoid discouragement among the Engineers , Sir ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தலைவர் அவர்களே, கேள்வி கேட்டிருப்பது பதவி நீட்டிப்பு என்பது பற்றியதாகும். தமிழகத்தில் அதைப் போல் யாருக்கும் பதவி நீட்டிப்பு கொடுக்கப்படவில்லை. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய மதுரை நகராட்சியில் பணியாற்றுகிற நகராட்சிப் பொறியாளருக்கு மறுநியமனம் செய்யப்பட்டிருக்கிறது, "ரீ எம்ப்ளாய்மென்ட்" தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட பதவி உயர்வில் சில குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டு, அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதன் பேரில், அவருக்கு 6 மாத காலத்திற்குப் பதவி மறுநியமனம் கொடுக்கப்பட்டு அவர் பணியாற்றி வருகிறார்.

Thiru V. ISVARMURTI : The Engineers represented to me that this is another way of getting round the idea of extension. Will the Government make a definite statement to the effect that no further extension will be given to engineers who are less qualified and thus avoid discouragement among the highly qualified engineers ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறேன். "எக்ஸ்டென்ஷன்" என்பது கொடுக்கப்படுவதில்லை. மறு நியமனம் கொடுக்கப்படுகிறது. எக்ஸ்டென்ஷன் என்கிறபோது, அதற்கான விதிமுறைகளின் கீழ் அவர்களுக்கான ஊதிய உயர்வு கொடுக்கப்படும். ஆனால் மறுநியமனம் என்கிறபோது, அவை பின்பற்றப்படுவதில்லை. சில வேளைகளில் சில தகுந்தவர்களின் உபயோகத்தைக் கருதி, அவர்களுக்கு மறு நியமனம் கொடுத்து நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. முடிந்த அளவுக்கு அரசாங்க உத்திரவுகளின் மூலமாக புதியவர்களுக்கு வாய்ப்பு அளிக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தனிப்பட்ட அவருடைய விவகாரத்தில் ஆரம்ப காலத்தில் சற்று முறையில்

27th January 1970]

வகுப்புவாரியாக பதவி அளித்தல் என்ற ஆணை இருந்த போது, தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உயர்வு கிடைக்காமல் போய்விட்டது என்று அரசாங்கத்திற்கு அவர் முறையிட்டார். அவருடைய தகுதி வாய்ப்பைக் கருதி 6 மாதத்திற்கு அவருக்கு மறுநியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில வேளையில் சிலருடைய சேவை தேவை என்று அரசாங்கம் கருதுவதால், விதிவிலக்குக் கொடுத்து இது போன்ற நியமனம் செய்யப்படுகிறது.

Omni buses.

*78. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the income of the Tamil Nadu State Transport Government Department is affected due to the grant of licences to a large number of Omni buses and Tourist buses in Tamil Nadu ;

(*b*) if so, the action taken by the Government in this regard ; and

(*c*) whether the Government are aware of the plying of Tourist buses from Madras to Madurai daily during nights ?

சிர்வசதிப் பேருந்துகள்.

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் மிக அதிகமாக Omni bus, Tourist bus கள் அனுமதிக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தின் வருமானம் பாதிக்கப்படுகிறதா ?

(இ) ஆம், எனில் அது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(உ) இரவு நேரங்களில் சென்னையிலிருந்து மதுரைக்கு தினமும் Tourist bus போக்குவரத்து நடைபெறுவதை அரசு அறியுமா ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : (*a*) Yes.

(*b*) All Regional Transport Officers have been instructed not to grant fresh permits for omni buses indiscriminately but to take into consideration the extent to which additional contract carriages may be necessary or desirable in public interest. Four units of flying squads have been sanctioned to check intensively the misuse of omni buses.

(*c*) Certain cases of plying of tourist buses in the night were detected and charged.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தினமும் மதுரையிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து மதுரைக்கும் இதுபோன்ற பஸ்கள் வாடிக்கையாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதில் சட்டமன்ற உறுப்பினர்களே கூட, குழுத் தலைவரை நியமித்து நாங்கள் மதுரைக்கு இன்னார் தலைமையில் உல்லாசப் பயணம் செய்கிறோம் என்று எழுதிக்கொடுத்து விட்டு பயணம் செய்கிறார்கள். இவைகளுக்காக சென்னையிலும் மதுரையிலும் பெரிய விளம்பரங்கள் செய்து பிரயாணிகள் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் அரசுத் துறைக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. இது போன்ற நடவடிக்கைகளை உடனடியாகத் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்னி பஸ்கள் ஓடுவதால், அரசுத் துறைக்கு மட்டுமல்ல, தனியார் துறைக்கும் கூட நஷ்டம் ஏற்படுகிறது. என்பதை இந்த வினாவிற்கு பதில் அளிக்கும் போது (அ) பகுதிக்கு விடையாக "எஸ்" என்று தான் கூறியிருக்கிறேன். இதைக் கட்டுப்படுத்த நாளைய தினம் நான் இந்த அவைக்குக் கொண்டுவர இருக்கிற தீர்மானம் இப்படிப்பட்ட தவறுகளை நீக்க உதவும் என்று கருதுகிறேன்.